வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.



Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 01.10.2025 புதன்கிழமை இதழ் : 274 பக்கங்கள் : 08


## சர்வதேச நீதி கோரிய உண்ணாவிரதம்:

# போராட்டத்தின் இறுதிநாளான இன்று சகலரையும் பங்கேற்குமாறு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 01

**தமிழ் மக்களுக்கு சர்வதேச நீதி கோரிய உண்ணாவிரத போராட்டத்தின் இறுதிநாளான இன்று புதன்கிழமை சகல தரப்பினரும் போராட்டத்தில் பங்கேற்கவேண்டும் என்று வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.**

உள்நாட்டு பொறிமுறையை நிராகரிக்கிறோம், தமிழ் இன அழிப்பு, காணாமல் ஆக்கப்படுதல், போர் குற்றங்கள், மனிதப் புதைகுழிகள் தொடர்பான விடயங்களுக்கு சர்வதேச - சுயாதீன விசாரணையே வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து சுழற்சி முறையிலான உண்ணாவிரத போராட்டம் கடந்த 25ஆம் திகதி ஆரம்பமானது.

செம்மணியில் - அணையா விளக்கு போராட்டம் நடைபெற்ற இடத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் சுழற்சி முறையிலான இந்த உண்ணாவிரதப் போராட்டம் இன்று புதன்கிழமை நிறைவடைகிறது.

போராட்டத்தின் 6ஆவது நாளான நேற்றைய தினம் போராட்ட ஏற்பாட்டாளர்கள் ஊடகங்கள் மத்தியில் கருத்து வெளியிடுகையில்,

போராட்டத்தின் இறுதிநாளான இன்று அனைத்துத் தரப்பினரும் பங்கேற்று எமது கோரிக்கைகளுக்கு வலுச் சேர்க்கவேண்டும்.



07

## எரிபொருள் விலை குறைப்பு!

கொழும்பு, ஒக். 01

நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும்வகையில் சில எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. எனினும், 92 ஒக்ரேன் பெற்றோலின் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

95 ஒக்ரேன் பெற்றோல் 6 ரூபாய் குறைக்கப்பட்டு ஒரு லீற்றரின் புதிய விலை 335 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று, ஒட்டோ டீசல் 6 ரூபாய் குறைக்கப்பட்டு லீற்றர் ஒன்றின் புதிய விலை 277 ரூபாயாகவும் மண்ணெண்ணெய் 5 ரூபாய் குறைக்கப்பட்டு ஒரு லீற்றரின்

07

### இலங்கையின் கடன் மறுசீரமைப்பு:

## முதலீட்டாளர் நம்பிக்கை மீண்டது ஆனாலும் அபாயம் நீடிக்கின்றது!

### சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை

நியூயோர்க், ஒக். 01

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு, கடன் வாங்கும் செலவுகளை குறைத்து, நிதிச் சந்தைகளில் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மீட்டெடுத்துள்ளபோதிலும், நிலைமை முழுமையாக சீரடையவில்லை என்று சர்வதேச நாணய நிதியம் எச்சரித்துள்ளது.

'இலங்கையின் அரச கடன் மறுசீரமைப்பு: சிக்கலான செயல்முறைகளில் இருந்து பாடங்கள்' என்ற தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையில் சர்வதேச நாணய நிதியம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

மறுசீரமைப்புக்கு பிந்தைய இலங்கையின் கடன் தொகுப்பு மிகவும் சிக்கலானது என்றும் இதற்கு வலுவான அரச கடன் முகாமைத்துவம்

07

## இலங்கையின் பொருளாதாரம் 2026இல் வீழ்ச்சியடையக்கூடும்

### ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரிக்கை

மண்டலுயோங், ஒக். 01

2025ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதார மீட்சி வேகம் பெற்றிருந்தாலும் 2026இல் வீழ்ச்சியை சந்திக்கக்கூடும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரித்துள்ளது.

2026ஆம் ஆண்டுக்கான இலங்கையின் வாய்ப்புகள் வெளிப்புற அதிர்ச்சிகளால் சூழப்பட்டுள்ளமையை இதற்கு காரணம். 2024ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருவாயில் கிட்டத்தட்ட கால் பங்கை வகித்த தைத்த ஆடைகள், இறப்பர் போன்றவை அமெரிக்காவின் 20 வீத வரி விதிப்பால் பாதிக்கப்படும். இது பொருளாதார வளர்ச்சியை 3.3 வீதமாகக் குறைக்கும். இந்த நடவடிக்கை ஏற்றுமதி போட்டித் தன்மையை பலவீனப்படுத்துவதுடன் வேலை இழப்புகளை தூண்டும்

07

## வடக்கின் கல்வி புலத்தில் அதீத அரசியல் தலையீடு

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 01

வடக்கு மாகாண கல்விப் புலத்தில் என்றும் இல்லாதவாறு அரசியல் தலையீடுகள் அதிகரித்துள்ளன - என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் வெளியிட்ட அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

07

## நாட்டில் ஐந்து பேரில் ஒருவருக்கு மனநோய்

கொழும்பு, ஒக். 01

நாட்டில் ஐந்தில் ஒருவருக்கு ஏதாவது ஒரு வகையான மனநோய் இருக்கிறது என்று சிரேஷ்ட மனநல மருத்துவர் சஞ்சீவன அமரசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய மனநல நிறுவனத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நாட்டில் பதிவான தற்கொலைகளில்

07

## தமிழ் வர்த்தகரிடம் கொள்ளை; மன்னம்பேரிக்கு பிடியாணை

கொழும்பு, ஒக். 01

தமிழ் வர்த்தகர் ஒருவரை அச்சுறுத்தி பெருந்தொகை அரிசியுடன் பாரவூர்தியை கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரான சம்பத் மன்னம்பேரியை கைது செய்து முற்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரசாந்த கொடவெல உத்தரவிட்டுள்ளார்.

மித்தெனிய பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருள் தயாரிப்பதற்கான மூலப்பொருட்கள் அடங்கிய இரண்டு கொள்கலன்கள் கண்டுபிடிக்கப்பட்ட

07

## இனவாதத்தை கிளப்பும் பிசாசுகள் மீளெழுகின்றன

### கடற்றொழில் அமைச்சர்

யாழ்ப்பாணம், ஒக். 01

"இனவாதத்தை கிளப்பும் பிசாசுகள் மீண்டெழுந்துள்ளன. அதிகாரத்துக்காக சதி குறித்தும் - சூழ்ச்சி பற்றியும் அவை மந்திராலோசனை நடந்துகின்றன. இந்த பிசாசுகளிடமிருந்து நாட்டை பாதுகாக்க மக்கள் ஒன்று பட வேண்டும்", என்று தெரிவித்துள்ள

07

## பாடசாலை காணியை விடுவித்தது இராணுவம்

மட்டக்களப்பு, ஒக். 01

மட்டக்களப்பில் சுமார் 35 வருடங்களாக படையினர் ஆக்கிரமித்து வைத்திருந்த பாடசாலை காணி நேற்றைய தினம் உத்தியோகபூர்வமாக விடுவிக்கப்பட்டது.

முறக்கொட்டாஞ்சேனை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயத்துக்கு சொந்தமான 2 ஏக்கர் காணியே இவ்வாறு விடுவிக்கப்பட்டது.

காணியை விடுவித்தமைக்கான பத்திரம்

07

## ரவிராஜ் படுகொலை வழக்கில் மன்னம்பேரி சந்தேகநபரல்லர்

### சிறீ லங்கா பொதுஜன பெரமுன

கொழும்பு, ஒக். 01

போதைப்பொருள் விவகாரத்தில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சம்பத் மன்னம்பேரி தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை விவகாரத்தில் சந்தேக நபரல்லர், அவர் சாட்சியாளர், அவருக்கு எதிராக இந்த விடயத்தில் வழக்குத் தாக்கல்

07




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பொருளாதார நிலையத்தின் செயல்பாடுகள் மீண்டும் ஆரம்பம்!





யாழ்ப்பாணம், ஒக். 01

யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையத்தின் செயல்பாடுகள் மீண்டும் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்வு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ. சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், பாராளுமன்ற உறுப்பினர்களான க. இளங்குமரன், எஸ். சிறீபவானந்தராசா, ஜெ. ரஜீவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொருளாதார மத்திய நிலையத்தை நாடாவெட்டி திறந்து வைத்ததுடன், மொத்த விற்பனை வியாபாரத்தையும் விருந்தினர்கள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர், யாழ். மாவட்ட செயலர், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், பிரதேச செயலாளர்கள், விவசாய சம்மேளன பிரதிநிதிகள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ-05)

## ஏடு தொடக்குதலும் மாணவர் அனுமதியும்

யாழ்ப்பாணம், ஒக். 01

விஜயதசமி தினமான நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சிவகுரு ஆதீனத்தில் தவத்திரு வேலன் சுவாமிகளால் ஏடு துவக்கப்படும் என்று ஆதீனம் அறிவித்துள்ளது.

சிறுவர் வகுப்பு மற்றும் ஆன்மீக வகுப்புகளுக்கு புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர். தங்கள் பிள்ளைகளுக்கு ஏடு துவக்க விரும்புவோர், வகுப்புகளில் இணைய விரும்புவோர் ஆதீன பணிமனையுடன் (077 222 0103) தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சிறுவர் தினமும் வாணி விழாவும்

யாழ்ப்பாணம், ஒக். 01

யாழ். மாநகர சபையின் கலாசார குழுவும் பெண்கள், சிறுவர் குழுவும் இணைந்து நடத்தும் சிறுவர் தின நிகழ்வும் வாணி விழாவும் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நல்லை ஆதீனத்தில் கலாசார குழுவின் தலைவர் கிளமெண்ட் மாட்டீன் நெல்சன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராஜா, சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகர பிரதி முதல்வர் இம்மானுவேல் தயாளன், யாழ். மாநகர சபை ஆணையாளர் ச. கிருஷ்ணேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

## காந்தி ஜெயந்தி விழாவும் சிறுவர், முதியோர் தினமும்

கிளிநொச்சி, ஒக். 01

அகில இலங்கை காந்தி சேவா சங்கமும் காந்தி சிறுவர் அபிவிருத்தி நிலையமும் இணைந்து நடத்தும் 156ஆவது காந்தி ஜெயந்தி விழாவும் உலக சிறுவர், முதியோர் தின நிகழ்வும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி, உருத்திரபுரத்திலுள்ள காந்தி சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் அதன் தலைவர் திருமதி ரதி குணசேகரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி முருகானந்தா கல்லூரி அதிபர் அ. பங்கயற்செல்வன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட நன்னடத்தை உத்தியோகத்தர் டி. ருவான் பிரசாத் தர்மதாஸ ஆகியோர் பங்கேற்பர்.

காந்தியின் சத்திய சோதனை என்ற தலைப்பில் சின்மய மிஷன் வதிவிட ஆச்சாரியார் சிவத்திரு சைதன்ய சுவாமிகளின் உரையை தொடர்ந்து காந்தி நினைவு பேருரையை இலக்கிய விமர்சகரான இரா. கருணாகரன் ஆற்றுவார். (ஐ)

## யாழ். பல்கலைக்கழகம் முன்பாக ஆசிரியர் சங்கத்தினர் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 01




யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்பாக அதன் ஆசிரியர் சங்கத்தினர் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊதிய உயர்வு, நிறுத்தப்பட்ட சலுகைகளை மீள வழங்க வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்துடன் இணைந்து இந்த ஒருநாள் அடையாள போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்திருந்தனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலை மறித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

போராட்டம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்க தலைவர் கலாநிதி விக்னேஸ்வரன், "இன்றைய அரசின் கல்வி அமைச்சர், ஜனாதிபதி உள்ளிட்டவர்களுடன் எமது பிரச்னைகள் குறித்து பல சுற்றுப் பேச்சுகளை நடத்தி தீர்வை வழங்க அவர்கள் இணங்கிய நிலையில் தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் அல்லது இழுத்தடிப்பு நிலை இருந்து வருவதால், அதற்கு எமது எதிர்ப்பை வெளிக்கொணரும் வகையிலும் தீர்வை விரைவுபடுத்தக் கோரியுமே இந்த போராட்டத்தை நாம் முன்னெடுக்கிறோம். இந்த அரசு தற்போது கொண்டுவந்துள்ள சம்பள சீரமைப்பில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் கடுமையாக பாதிக்கப்படும் நிலை உள்ளது.

கல்வி மறுசீரமைப்பை இந்த அரசு முன்னெடுக்கின்றது. இந்த நடவடிக்கை உரிய ஆய்வுகளை மேற்கொள்ளாது மேற்கொள்ளப்படுகிறது என எம்து தாய்ச்சங்கம் சுட்டிக்காட்டிய போதும், அது தொடர்பில் அரசு அக்கறை கொள்ளாதிருக்கிறது. இந்தப் பிரச்னைகளுக்கான தீர்வை விரைவுபடுத்தும் நோக்கிலேயே இந்த ஒரு நாள் அடையாள போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது - என்றார். (ஐ-03)

## அம்பன் மருத்துவமனையில் பழ மரக்கன்றுகள் நாட்டல்!

வடமராட்சி, ஒக். 01



வடமராட்சி கிழக்கு அம்பன் பிரதேச மருத்துவமனையில் 38 பழ மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன.

வடமராட்சி, வடமராட்சி கிழக்கை சேர்ந்த சமூக ஆர்வலர்களால் கொய்யா மரக்கன்றுகள் நேற்றைய தினம் நாட்டி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அம்பன் மருத்துவமனையின் மருத்துவ அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் கனைச்செல்வன், சுரேஷ்குமார், சி. த. காண்டீபன், த. கார்த்தீபன், கி. விசிகரன், ஜெயகோபி எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-02)

## விவசாய நிலங்களின் அருகே மருத்துவமனை கழிவு எரிப்பு

### கோப்பாய் மக்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 01

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கழிவுகள் கோப்பாய் நன்னீர் திட்டம், விவசாய நிலங்களுக்கு அருகாமையில் கொட்டப்பட்டு எரியூட்டப்பட்டன.

நேற்று முன்தினம் மருத்துவமனை பணியாளர்களின் இந்தச் செயலை வலி. கிழக்கு பிரதேச சபையின் ஊழியர்கள் தடுத்தனர். எனினும், "நீதிமன்ற உத்தரவின் பேரில் எரிக்கின்றோம்" என்று கூறி கழிவுகளை எரியூட்டினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

யாழ். போதனா மருத்துவமனையின் பொறுப்பற்ற இந்தச் செயலுக்கு கோப்பாய் பிரதேச மக்கள் அதிருப்தியையும் எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளனர்.

சூழலையும், நன்னீர் வளத்தையும் விவசாய நிலங்களையும் அச்சுறுத்தும் இந்தச் செயலுக்கு எதிராக உடனடி சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ)






## சிறுவர் தினத்தை முன்னிட்டு பொலிஸாரால் பொதி அன்பளிப்பு

வடமராட்சி, ஒக். 01

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு வடமராட்சி கிழக்கு - அம்பன் கிராமத்தை சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொதி ஒன்றை மருதங்கேணி பொலிஸார் வழங்கி வைத்தனர்.

இந்தப் பொதியில் பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள், அத்தியாவசிய பொருட்கள் என்பன உள்ளடங்கியிருந்தன. இந்தப் பொதி வழங்கும் நிகழ்வில் மருதங்கேணி பொலிஸார் கலந்து கொண்டனர்.

இதேவேளை, மருதங்கேணி பொலிஸாரின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை தாழையடி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் சிறுவர் தினம் கொண்டாடப்படவுள்ளது. (ஐ-02)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
01.10.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மீண்டும் நெருக்கடி தோன்றுமா?

ஒரு நாட்டுக்கான நெருக்கடி பெரும்பாலும் பொருளாதாரச் சரிவிலிருந்துதான் ஆரம்பிக்கும். பொருளாதார நெருக்கடிதான் தாங்கள் பெரும் விருப்பத்தோடு வாக்களித்த தலைவரான கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக சிங்கள மக்களை அணி சேர்த்தது. ஆனால், மக்கள் அணி சேரும் விடயங்கள் எல்லாம் முற்போக்கானது என்றோ, அது சரியானது என்றோ பொருள் இல்லை. பொதுவாக அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் ஒன்று சேரும் இடங்களை நோக்கினால் ஒரு விடயத்தைக் காணலாம். அங்கு அதிகம், ஊதாரித்தனமாக வாழும் பலர் திரண்டிருப்பர்.

பெரும்பாலும் அவ்வாறானவர்கள்தான் வன்முறைகளில் ஈடுபடுபவர்களாகவும் இருப்பர். சாதாரண ஒரு குடும்பஸ்தர் அல்லது பதவி நிலைகளில் இருப்பவர்கள் எப்போதும் இவ்வாறான கிளர்ச்சி நடவடிக்கைகளிலிருந்து விலகியே நிற்பர். அவ்வாறுதான் 'அறகலய' விலும் பல தரப்பினர் திரண்டனர். சிந்திக்கும் சமூகமொன்றும் இணைந்தது. அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களும் இணைந்தனர். அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களே ஏனைய அரசியல்வாதிகளை இலக்கு வைத்துச் செயல்பட்டனர். கோட்டாபய என்னும் ஒருவரை அகற்றுவதுடன் அந்த மக்கள் சீற்றம் முடிவுக்கு வந்தது.

கோட்டாபயவின் வெளியேற்றம் தென்னிலங்கை அரசியலில் அதுவரையில் தலைவர்களாக நோக்கப்பட்டவர்கள் அனைவரின்மீதான அவநம்பிக்கையாக மாற்றமுற்றது. இந்தப் பின்புலத்தில்தான் அநுர குமார புதிய தலைவராக எழுச்சியுற்றார்.

ஆனாலும், முற்றிலுமாக அனைத்து சிங்கள மக்களும் அவரின் பக்கமாகத் திரும்பினார்கள் என்றில்லை. இதன் காரணமாகத்தான் அநுர குமார திஸநாயக்க ஐம்பது வீதமான வாக்குகளைப் பெற முடியாமல் போனது. இவ்வாறானதொரு பின்புலத்தில் அடுத்த தடவை அநுர எழுச்சியடைய வேண்டும் என்றால் - ஆகக் குறைந்தது வெற்றிபெற வேண்டும் என்றால் - கிடைத்திருக்கும் ஆட்சிக் காலத்தில் மக்களை அவர் திருப்திப்படுத்த வேண்டும். குறிப்பாக, பொருளதாரம் சரியாத நிலையில் நாட்டைக் கொண்டு செல்ல வேண்டும்.

கடந்த தலையங்கத்தில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மதிப்பீடு தொடர்பில் சுட்டிக் காட்டியிருந்தோம். தற்போது, ஆசிய அபிவிருத்தி வங்கியின் "இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்கான வாய்ப்பு" தொடர்பான அறிக்கையும் வெளியாகியிருக்கிறது. குறித்த அறிக்கையின்படி, அடுத்த ஆண்டு இலங்கையில் பொருளாதாரம் இந்த ஆண்டை விடவும் மோசமான நிலையில் பின்னடைவுகளைச் சந்திக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்காவின் 20 வீதமான வரி விதிப்பு இலங்கையின் ஏற்றுமதித் துறையைப் பெருமளவில் பாதிக்கும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரித்திருக்கிறது.

இவ்வாறானதொரு நிலையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எவ்வாறு நாட்டை பொருளாதார நிலையில் மீண்டும் விழுந்துவிடாத வகையில் கொண்டுசெல்லப் போகிறது என்பதே அடிப்படையானது. மற்றையவைகள் எல்லாம் இங்கு முக்கிய விடயமல்ல. ஏனெனில், அவ்வாறான விடயங்களுக்காக மக்கள் வீதிக்கு வரப்போவதில்லை. மக்கள் நேரடியாகப் பாதிக்கப்படும்போது மட்டும்தான் எதிர்ப்பைக் காண்பிப்பார்கள். அந்த எதிர்ப்பை ஓர் அரசியல் வேலைத்திட்டமாக மாற்றும் தரப்புகள் மக்கள் எழுச்சியாக மாற்றுகின்றன. அறகலயவில் அதுதான் நடந்தது. அப்போது, ஜே. வி. பி. சூழலை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது. ஒருவேளை, ஜே. வி. பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியால் முடியாதபோது, அவர்களுக்கு எதிரான மக்கள் எதிர்ப்பை அரசியலாக்கும் ஆற்றலுள்ளவர் யார்? அதிலும் கேள்வியுண்டு. ஏனெனில், ஒழுங்குபடுத்தப்பட்ட நிலையில் தற்போது தென்னிலங்கையில் எந்தவொரு தலைமையும் இல்லை. ஒருவேளை கூட்டாக இணைந்து செயல்பட்டாலும் கூட அவர்களால் பின்னர் இணைந்து நாட்டை வழிநடத்த முடியுமா என்பதிலும் கேள்விகள் உண்டு. மொத்தத்தில் இலங்கையின் எதிர்காலம் தொடர்ந்தும் நெருக்கடிக்குள்தான் இருக்கப் போகிறது என்பது மட்டும் உண்மை.

## பஸ்களில் பயணச்சீட்டு இன்று முதல் கட்டாயம்

கொழும்பு, ஒக். 01

மேல் மாகாணத்தில் தனியார் பஸ்களில் பயணிப்பவர்களுக்கு பயணச் சீட்டுகளை வழங்குவது இன்று புதன்கிழமை முதல் கட்டாயமாக்கப்படும் என மேல் மாகாண வீதி தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மாகாண பஸ் வலையமைப்பிற்குள் பொறுப்புக்கூறல் மற்றும் சேவை தரங்களை மேம்படுத்துதல் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் காமினி ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த புதிய நடைமுறையானது மேல் மாகாணம் முழுவதும் அமுல்படுத்தப்படுவதுடன் தனியார் பஸ் நடத்துநர்களால் அறவிடப்படும் ஒவ்வொரு கட்டணத்துக்கும் ஒரு பயணச் சீட்டை வழங்குதல் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வைத்தியசாலைக்குள் புகுந்த யானை!

கொழும்பு, ஒக். 01

மின்னேரிய ஆயுர்வேத மருத்துவமனை வளாகத்துக்குள் நுழைந்த காட்டு யானை ஒன்று அட்டகாசம் செய்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஜன்னலை உடைத்து, நோயாளிகள் வைத்திருந்த பொருட்களை வெளியே எடுத்து உண்டதுடன் படுக்கை மற்றும் இரும்புப் பெட்டியைச் சேதப்படுத்தியுள்ளது.

இதையடுத்து ஊழியர்கள் கூச்சலிட்டு காட்டு யானையை விரட்டியடித்துள்ளனர்.

காட்டு யானைகள் அடிக்கடி மருத்துவமனையைத் தாக்கி, சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதாகவும், இதனால் ஆபத்து ஏற்படக் கூடும் என்ற அச்சத்தில் தொடர்ந்து இருப்பதாகவும் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

மருத்துவமனையைப் பாதுகாக்க மின் வேலி அமைக்கவேண்டும் என்று தாங்கள் பலமுறை கோரிக்கைகளை முன்வைத்தபோதிலும் அதிகாரிகள் எந்தவித நடவடிக்கைளும் எடுக்காதிருப்பதாக இருப்பதாக அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

## ஏ-9 வீதியில் பஸ் விபத்து; மூவர் காயம்!

கொழும்பு, ஒக். 01

ஏ-9 வீதியில் அநுராதபுரம், மிஹிந்தலை , பலுகஸ்வெவ பிரதேசத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளதாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கதிர்காமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போது பஸ்ஸில் பயணித்த மூன்று பேர் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக மிஹிந்தலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## அதிவேக நெடுஞ்சாலையில் ஓய்வு அறை

கொழும்பு, ஒக். 01

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் உடுகாவ பகுதியில் சாரதிகள் மற்றும் பயணிகள் ஓய்வெடுக்க அறையொன்றை அமைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில சி.கே. பெரேரா இதற்கான அடிக்கல் நாட்டியுள்ளார்.

இந்த ஓய்வுப் பகுதி மாத்தறையில் உள்ள கொடகம மற்றும் கொக்மாடுவ இடையேயான 119 கிலோ மீற்றர் எல்லைக்கு அருகில் கட்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கெஹெல்பத்தரவின் துப்பாக்கியை வைத்திருந்ததாக இருவர் கைது!

கொழும்பு, ஒக். 01

ஒழுங்மைக்கப்பட்ட குற்றக் குற்றக்குழு உறுப்பினரான 'கெஹெல்பத்தர பத்மே' என்பவருக்குச் சொந்தமான மைக்ரோ ரக துப்பாக்கி ஒன்றைக் கைவசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ், இரு நபர்களை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கைது செய்துள்ளது.

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் கைது செய்யப்பட்ட கெஹெல்பத்தர பத்மேயை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விசாரித்தபோது, குற்றச் செயல்களைச் செய்வதற்காகத் தான் வைத்திருந்த ஒரு துப்பாக்கியை களனி - நாதுடுவ பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரிடம், அவர் ஒப்படைத்ததாகத் தெரியவந்தது.


இந்தத் தகவலின் அடிப்படையில், நாதுடுவ பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

அத்துடன்,இதே சம்பவங்களுக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டின் பேரில், ஜா-எல வெலிகம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் 24 முதல் 38 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.

இந்தக் கைதுகள் தொடர்பான மேலதிக விசாரணைகளை, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் வர்த்தகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. சகிப்புத் தன்மை தேவைப்படும்.

**மிதுனம்**
மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். நன்மை கிட்டும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். அதிர்ஷ்டமான நாள்.

**சிம்மம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கன்னி**
எதிர்ப்புகள் அடங்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**துலாம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். புதிய வாய்ப்புகள் தேடி வரும்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். அதிகாரிகளு டன் பனிப்போர் வந்து நீங்கும். விழிப்புடன் செயல்படவேண்டும்.

**மகரம்**
குடும்பத்தினரை அனுசரித்து போவீர்கள். கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். மேலதிகாரியுடன் மோதல்கள் வேண்டாம். நிதானம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். புது அதிகாரி உங்களை மதிப்பார். மதிப்புக் கூடும்.

**மீனம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். வீடு வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் லாபம் ஈட்டுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். முயற்சிகளில் வெற்றி கிட்டும் நாள்.

# மக்களின் விருப்பத்தை மனதில் கொண்டு மன்னார் காற்றாலை கட்டப்பட வேண்டும்

## மனோ கணேசன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 01

மக்களின் விருப்பத்தை மனதில் கொண்டு மன்னாரில் காற்றாலை கட்டப்பட வேண்டும். வளர்ச்சித் திட்டங்கள் மக்களுக்கு சாதகமான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு மேலும் கூறுகையில்,

மக்களுக்கு எதிராக திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டால், மக்கள் தொடர்ந்து போராட்டம் நடத்துவார்கள். நாங்கள் விரும்பாத விடயங்களை ஊடகங்களில் பார்த்தோம்.

மன்னார் மக்கள் வீதியில் அமர்ந்து தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்கள். பொலிஸார் தங்கள் வேலையைக் காட்டுகின்றனர்.

இந்த காற்றாலை திட்டம் குறித்து ஜனாதிபதி, மன்னார் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மதத் தலைவர்கள் குழுவாக விவாதித்துள்ளனர். இந்த சதித்திட்டம் குறித்து மக்கள் அறிந்ததும் அவர்கள் தொடர்ந்து எதிர்த்தனர்.

பாதாள உலகத்தைத் தடுத்து நிறுத்தவும் குற்றவாளிகளைப் பிடிக்கவும் நாங்கள் இரு கைகளையும் உயர்த்துகிறோம். எந்தப் பிரச்னையும் இல்லை. நாங்கள் அதற்கு எதிரானவர்கள் அல்ல, இருப்பினும் மக்கள் போராட்டங்களைத் தடுக்கக்கூடாது என அவர் தெரிவித்தார். (எ)

# பிழவாதத்தை கைவிட்டு மக்களின் வாழ்வியல் உரிமையை உத்தரவாதப்படுத்த வேண்டும்

## மன்னார் காற்றாலை திட்டம் குறித்து சுரேஷ்

யாழ்ப்பாணம், ஒக். 01

மன்னார் தீவுப்பகுதியில் புதிதாக அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரங்களால் நிலத்தடிநீர் பாதிக்கப்படுவதுடன் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படும் என்று சமூக ஆர்வலர்களும் சூழலியலாளர்களும் உளவியல் அறிஞர்களும் கருத்து தெரிவிக்கின்ற நிலையில் அரசாங்கம் தனது பிடிவாதத்தைக் கைவிட்டு மக்களின் வாழ்வியல் உரிமையை உத்தரவாதப்படுத்த முன்வர வேண்டும். எத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகளும் மக்களின் வளமான எதிர்காலத்தை உத்தரவாதப்படுத்துவதாக இருக்க வேண்டுமே அன்றி அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதாக அமைந்துவிடக்கூடாது என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையில் மாற்று வலு சக்தியை வலுப்படுத்துமுகமாக காற்றாலை மின்கோபுரங்கள், சூரிய சக்தி மின் ஆலைகள் என பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில், குறிப்பாக மன்னார் தீவுப்பிரதேசத்தில் அப்பிரதேசம் சுற்றிவர கடலைக் கொண்டிருப்பதன் காரணமாக பாரிய காற்றாலைகளை அமைக்க அரசாங்கம் தனியார் துறைகளுக்கு ஊக்கமளித்து வருகின்றது.

மன்னார் மக்கள் இரண்டு பிரச்னைகளை எதிர்கொண்டு வருகின்றனர். ஒன்று கனியவளமிக்க மண் கொள்ளையிடப்படுகின்றது. மக்கள் அதிகம் வாழக்கூடிய பிரதேசங்களில் காற்றாலை மின் கோபுரங்கள் அமைக்கப்படுகின்றன.

மன்னார் தீவில் ஏற்கனவே முப்பதுக்கும் மேற்பட்ட மின் கோபுரங்கள் அமைக்கப்பட்டிருப்பதால் அதனுடைய இரைச்சல் ஒலி என்பது மக்களையும் மாணவர்களையும் வெகுவாக பாதித்து வருவதாக மக்கள் ஏற்கனவே முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர்.

மேலதிகமாக இன்னும் பல காற்றாலைகளை அமைக்க நிறுவனங்கள் முயற்சிப்பதானது மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் மேல் கோபத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியிருக்கின்றது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# கிளிநொச்சியில் வெடிகுண்டுகள் மீட்பு

கிளிநொச்சி, ஒக். 01

கிளிநொச்சி - தட்டுவான் கொட்டி பகுதியில் நேற்றும் வெடிக்காத நிலையில் வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

அந்தப் பகுதியில் நேற்று முன்தினம் ஒரு வெடிப்பு சம்பவம் இடம்பெற்று இருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில் தட்டுவான் கொட்டி பகுதி முழுவதும் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது வெடிக்காத நிலையில் வெடிகுண்டுகள் காணப்பட்டன. இந்த நிலையில் அதனை மீட்பதற்கு நீதிமன்றத்தின் உத்தரவை பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (எ-05)

# விபத்தில் காயமடைந்த இளைஞன் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஒக். 01

கடந்த 25 ஆம் திகதி புதுக்குடியிருப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற வான் ஒன்று மீண்டும் புதுக்குடியிருப்பு நோக்கித் திரும்பிக்கொண்டிருக்கையில் அநுராதபுரம் தலாவ மீரிகம பகுதியில் முல்லைத்தீவிலிருந்து குருநாகல் நோக்கிச் சென்ற லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியிருந்தது.

இந்த விபத்தில் முல்லைத் தீவு- புதுக்குடியிருப்பு, செம்மலை பகுதிகளைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு [illegible] ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் நால்வர் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த புதுக்குடியிருப்பைச் சேர்ந்த மற்றுமொரு இளைஞனும் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

9ஆம் வட்டாரம் மல்லிகைத் தீவு - புதுக்குடியிருப்பைச் சேர்ந்த நடராசா விஷ்ணுயன் என்ற வயது - 21 இளைஞனே அநுராதபுரம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார். (எ)

# "அர்ச்சுனா எம். பி. திருந்த வேண்டும்"

யாழ்ப்பாணம், ஒக். 01

பொலிஸாருடன் பேசத்தெரியாத அர்ச்சுனா எம். பி. தனது தவறுகளை உணர்ந்து தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்று அடக்கு முறைக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தம்பிராசா தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பொலிஸாருடன் பேசத்தெரியாத அர்ச்சுனா எம்.பி. தனது தவறுகளை உணர்ந்து தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும். மேலும், தமிழ் மக்களின் உறவுகளான மலையக தமிழரை கொச்சைப்படுத்தும் செயல்பாடுகளையும் அர்ச்சுனா நிறுத்த வேண்டும்.

நீதி கேட்டு போராடும் தமிழினம் ஒற்றுமையை இழந்தால் தென்னிலங்கைக்கு கொண்டாட்டமாகவே இருக்கும் என்பதையும் அர்ச்சுனா விளங்கிக் கொள்ளவேண்டும்.

அந்தவகையில் முட்டாள்தனமாக அமைச்சர் சந்திரசேகரை தாக்குவதை அர்ச்சுனா எம். பி. கைவிட வேண்டும்.

அத்துடன் கடந்த கால விடயங்களை கூறி அர்ச்சுனா, மன்னார் காற்றாலை விடயத்தில் சாக்குப் போக்கு காட்டி தப்பித்துக் கொள்ள முடியாது. இது எமது மக்களின் இருப்புக்கான போராட்டம்.

இதை முன்னெடுக்கும் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் மன்னார் சென்று போராட்டத்தை வலுப்படுத்த வேண்டும்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘டயஸ்போரா’க்களின் நிகழ்ச்சி நிரலில் செயல்படுத்துகின்றது அநுரவின் அரசு!

## மகிந்த தரப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 01

**டயஸ்போராக்களின் நிகழ்ச்சி நிரலையே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயல்படுத்தி வருகின்றது என்று பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**



மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தியை ஆட்சிக்கு கொண்டுவருவதற்கு டயஸ்போராக்கள் மற்றும் வெளிநாட்டு சக்திகள் உதவி வழங்கின. இது இரகசியமான விடயம் அல்ல.

இலங்கையின் கலாசாரத்தை சீரழிப்பது இத்தரப்புகளின் பிரதான நோக்கமாகும். ஏனெனில் கலாசாரம் சீரழிந்த நாடொன்றை அழிப்பதென்பது மிக எளிது.

எனவே, வெளிநாட்டு சக்திகள் மற்றும் டயஸ்போராக்களின் நிகழ்ச்சி நிரலுக்கமைய இந்த அரசாங்கம் செயற்படுகின்றதா என்ற சந்தேகம் எமக்கு எழுகின்றது-என்றார். (அ)

# ஜனாதிபதி - ஜப்பான் நிதி அமைச்சர் இடையே இரு தரப்பு பேச்சுவார்த்தை

கொழும்பு, ஒக். 01

ஜப்பான் அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் ஜப்பான் நிதி அமைச்சர் கதோ கசுனொபுவுக்கும் இடையில் டோக்கியோவில் இருதரப்பு பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் ஜப்பான் உதவி ஒத்துழைப்பின் கீழ் தற்போது செயல்படுத்தப்படும் மற்றும் செயல்படுத்த எதிர்பார்க்கப்படும் புதிய திட்டங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

அமைச்சர் விஜித ஹேரத், டிஜிற்றல் பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஹான்ஸ் விஜயசூரிய, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹலங்கமுவ, ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவர், பேராசிரியர் பிவிதுரு ஜனக் குமாரசிங்க மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)



# ஜப்பானின் முன்னணி வர்த்தகர்களுடன் ஜனாதிபதி அநுரகுமார கலந்துரையாடல்

கொழும்பு, ஒக். 01

ஜப்பான் அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன் தினம் ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பின் தலைமையகத்தில் ஜப்பானின் முன்னணி வர்த்தகர்களுடன் வட்டமேசை கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பின் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி இஷிகுரோ நொரிஹிகோவின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் ஜப்பான் இலங்கை வர்த்தக ஒத்துழைப்புக் குழுவின் தலைவர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் காணப்படும் புதிய முதலீட்டு வாய்ப்புகள் குறித்து இங்கு சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நாட்டில் முதலீட்டுக்கு ஏற்ற சூழலை உருவாக்கி மோசடி மற்றும் ஊழலை ஒழிப்பதற்கு தற்போதைய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து தெளிவுபடுத்தினார்.

இலங்கையின் முக்கிய பொருளாதார பங்காளியாக இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான வர்த்தக ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் அவசியத்தையும், அதன் ஊடாகப் பெறக்கூடிய பரஸ்பர நன்மைகள் குறித்தும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், மேல் மாகாண ஆளுநர் ஹனிப் யூசுப், ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் பிவிதுரு ஜனக் குமாரசிங்க, டிஜிற்றல் பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஹான்ஸ் விஜயசூரிய, பொருளாதாரம் குறித்த ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் துமிந்த ஹலங்கமுவ மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பலர் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (அ)

# கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் தொடர்பான செயல்பாடுகளை விரைவுபடுத்த நடவடிக்கை!

கொழும்பு, ஒக். 01

வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தலைமையில், தூதரகப் பிரிவும் குடிவரவு-குடியேற்றத் துறையும் இணைந்து நடத்திய உயர்மட்டக் கூட்டம் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் தூதரகம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவுகளின் கூடுதல் செயலாளர்கள், தூதரக விவகாரங்களின் தலைமை இயக்குநர், குடிவரவு மற்றும் குடியேற்றத் துறையின் கட்டுப்பாட்டுச் செயலாளர், மேலும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் மற்றும் மேலதிக பொது மேலாளர் ஆகியோர் பங்கேற்றனர்.

இதன்போது பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர, குடிமக்களுக்கு சேவைகளை வழங்குவதில் அதிகாரிகள் காட்டி வரும் அர்ப்பணிப்பை பாராட்டியதுடன், குறிப்பாக கடவுச்சீட்டு விண்ணப்பங்களில் ஏற்பட்டிருந்த நிலுவைகளை வெற்றிகரமாக கையாண்டமைக்கு நன்றியைத் தெரிவித்தார். இதனால் வெளிநாடுகளில் வாழும் மற்றும் வேலை செய்யும் இலங்கையர்களுக்கு சேவைகள் சீரான முறையில் வழங்கப்படுவதற்கு பெரும் பங்களிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை விரைவுபடுத்துதல், செயல்முறைகளை டிஜிட்டல் மயமாக்குதல், நிர்வாக நடைமுறைகளை எளிமைப்படுத்துதல், இரட்டை குடியுரிமை விண்ணப்பங்களைச் செயலாக்கும் வேகத்தை மேம்படுத்துதல் ஆகியவை தொடர்பாக விரிவான கலந்துரையாடல்கள் நடைபெற்றன. மேலும் துறைத்தரப்பில் நிலவும் பல்வேறு செயல்பாட்டு பிரச்னைகளும் விவாதிக்கப்பட்டன.

இலங்கை வெளியுறவு அமைச்சு, உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் உள்ள அனைத்து இலங்கையர்களுக்கும் விரைவான, வெளிப்படையான மற்றும் மக்கள்மையமான சேவைகள் கிடைக்க, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பை வலுப்படுத்தத் தொடர்ந்து உறுதி பூண்டுள்ளதாகவும் அறிவித்துள்ளது. (அ)

# சஷீந்திரவின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஒக். 014

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சந்தேகநபர் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் பட்டபோதே கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டின் கீழ் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை மாணவர்களை ஏற்றி சென்ற வான் விபத்து!

## நான்கு பேர் காயம்

கொழும்பு, ஒக். 01

கொழும்பு - வொஷோல் வீதியில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவர்கள் உள்பட நால்வர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற வானும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸூம் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் வானின் சாரதியும் மூன்று பாடசாலை மாணவர்களும் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# அடுத்து வரும் தேர்தலில் மொட்டு ஆட்சி மலரும்!

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ

கொழும்பு, ஒக். 01

அடுத்த தேசிய தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சி ஆட்சியைக் கைப்பற்றும் என்று முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ சூளுரைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

அச்சம் அறியாத தலைவரே மகிந்த ராஜபக்ஷ. அவர் போலவே தற்போது நாமல் ராஜபக்ஷ செயற்பட்டு வருகின்றார். பாராளுமன்றத்தில் துணிவுடன் அரசியல் சமரில் ஈடுபடுகின்றார். சபையில் மூவர் இருந்தாலும் தமக்குரிய பணியை மொட்டு கட்சியினர் திறம்படச் செய்கின்றனர். நாமலின் துணிவுக்கு அஞ்சியே ஆளுங்கட்சியினர் அவரை குறிவைத்துள்ளனர். போலி குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுவருகின்றன.

அரசாங்கத்தின் அச்சுறுத்தல்களுக்கு நாம் அடிபணியமாட்டோம். எமது பயணம் தொடரும். பொதுஜன பெரமுன கட்சி மக்கள் சக்தியால் வலுப்படுத்தப்படும்.

அடுத்த தேசியமட்ட தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சி ஆட்சி மலரும். எமது கட்சியில் இருந்து ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் தெரிவாவார்கள்-என்றார்.

# தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் நுகேகொடையில் வழங்க ஏற்பாடு

கொழும்பு, ஒக். 02

புதுப்பித்தல் செயல்பாட்டின் போது வழங்கப்படும் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் நேற்று முதல் நுகேகொடையில் உள்ள தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தால் வழங்கப்படும் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது ... முதல் ... மருத்துவ நிறுவனத்தில் நேரடியாக முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்படும் என அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

புதுப்பித்தல் செயற்பாட்டின் போது தற்போதுள்ள சாரதி அனுமதிப் பத்திரத்தில் எந்த மாற்றங்களும் தேவையில்லை என்றால், தற்காலிக அனுமதிப் பத்திரத்தை நுகேகொடையில் உள்ள தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தில் நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரங்களுக்கான விண்ணப்பதாரர்கள் இனி வெரஹெரயில் உள்ள மோட்டார் போக்குவரத்து அலுவலகத்திற்குச் செல்லவேண்டிய அவசியமில்லை என்று திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழீழ விடுதலை புலிகளின் காலத்தில் புதைக்கப்பட்ட தங்கத்தை தேடி அகழ்வு



வவுணதீவு, ஒக். 01

தமிழீழ விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டதாக கூறப்படும் ஆயுதங்கள் மற்றும் தங்கத்தை தேடி மட்டக்களப்பு - வவுணதீவு காயங்குடா பகுதியில் உள்ள தனியார் காணியில் நேற்று முன்தினம் அகழ்வுப் பணி நடைபெற்றது.

நீதிமன்ற உத்தரவை பெற்று இந்த அகழ்வு பணியை விசேட அதிரடிப்படையினர் முன்னெடுத்தனர்.

கல்லடி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய அங்கு அகழ்வுப் பணியை முன்னெடுக்க நீதிமன்ற அனுமதி பெறப்பட்டிருந்தது.

மண் அகழ்வு இயந்திரத்தை பயன்படுத்தி அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கல்லடி விசேட அதிரடிப்படை பொறுப்பாளர், கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மேற்பார்வையின் கீழ் அகழ்வுப் பணி காலை 09. 00 மணி தொடக்கம் பிற்பகல் 01.00 மணி வரை முன்னெடுக்கப்பட்ட போதிலும் எந்தவொரு பொருளும் மீட்கப்படவில்லை.

இதையடுத்து அகழ்வுப் பணி நிறுத்தப்பட்டு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. (எ)



# தேக்கு மரக்குற்றிகளை ஏற்றிச்சென்றவர் கைது

சம்மாந்துறை, ஒக். 01

பெறுமதியான தேக்கு மரக் குற்றிகளை சட்ட விரோதமாக ஏற்றிச்சென்ற நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ. என். நிசாந்த பிரதிப்குமாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் இவ்வாறு குறித்த தேக்கு மரக்குற்றிகள் மீட்கப்பட்டன.

சம்மாந்துறை பொலிஸார் வங்களாவடி பிரதேசத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை குறித்த சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் 49 வயதுடைய நபர் ஒருவர் கைதானார்.

குறித்த கைது நடவடிக்கையை கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம். கே. இப்னு அசாரின் நெறிப்படுத்தலில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் முன்னெடுத்தனர். (எ-01)

# கண்டி, நுவரெலியாவில் கடும் மழைக்கு வாய்ப்பு

நுவரெலியா, ஒக். 01

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் கடும் மழையுடனான வானிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதேநேரம் வடமேல் மாகாணத்தில் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடும் என அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடிய சாத்தியம் காணப்படுவதுடன், காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் சிலாபத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-55 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் இருப்பதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

# பஸ் - டிப்பர் மோதி விபத்து

கிண்ணியா, ஒக். 01

திருகோணமலை, கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆயிலியடியிலிருந்து கிண்ணியா நோக்கிச் சென்ற பஸ் மீது டிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானது. நேற்று முன்தினம் காலை ஆயிலியடியிலிருந்து கிண்ணியா நோக்கிப் புறப்பட்ட பஸ், சூரங்கல் அல் அமீன் பாடசாலைக்கு முன்னால் உள்ள பஸ் தரிப்பிடத்தில் நிறுத்தி பயணிகளை ஏற்றும்போது டிப்பர் வாகனம் பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த விபத்து ஏற்பட்டது.

இவ்விபத்தில் பயணிகள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. பஸ்ஸின் முன்பகுதி சேதமடைந்துள்ளது. மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)



# எழுத்தறிவு தின ஊர்வலம்

கல்முனை, ஒக். 01

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் டிஜிற்றல் யுகத்தில் எழுத்தறிவை ஊக்குவித்தல் எனும் தொனிப்பொருளிலான சர்வதேச எழுத்தறிவு தின நடைபவனி நேற்று முன்தினம் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹுது துல் நஜீமால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கல்முனை வலயக் கல்விப் பணிமனை முகாமைத்துவப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளரும் கல்முனை கோட்டக் கல்விப் பணிப்பாளருமான யூ.எல். றியாலின் ஏற்பாட்டிலும் முறைசாராக் கல்விக்குப் பொறுப்பான எம். எம். சியாம் நெறிப்படுத்தலிலும் இந்த நடைபவனி மேற்கொள்ளப்பட்டது. (எ-06)

# மரக்கறிகளின் விலை வீழ்ச்சி

தம்புள்ளை, ஒக். 01

கடந்த சில நாட்களாக மரக்கறிகளின் விலை குறைவடைந்துள்ளதாக தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நாளாந்தம் கிடைக்கும் மரக்கறிகளின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக மரக்கறிகளின் விலை குறைவடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

க்ரட், போஞ்சி, பூசணி, கோவா, தக்காளி, லீக்ஸ், முள்ளங்கி ஆகியவற்றின் விலை குறைவடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதன்படி, ஒரு கிலோ பூசணி 60 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர். (எ)

# பெரும்போக நெற்செய்கை சம்மாந்துறையில் ஆரம்பம்

சம்மாந்துறை, ஒக். 01

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சம்மாந்துறை புளொக் "ஜே" பிரிவுக்குட்பட்ட வயல்காணிகளில் பெரும்போக பயிர்ச்செய்கையை எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை புளொக் ஜே திட்ட முகாமைத்துவ பிரிவு விவசாய பிரதிநிதிகளின் ஆரம்ப முன்னோடிக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் ராஜேந்திரா வேல்கஜன் தலைமையில் சம்மாந்துறை பங்களாவடி மண்டபத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

பெரும்போக பயிர்ச்செய்கை விதைப்புக் காலம் 15ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 10ஆம் திகதி வரை என்று தீர்மானிக்கப்பட்டது.

மூன்று, மூன்றரை மாத நெல்லினம் பயிரிடப்பட வேண்டும். காப்புறுதிக் காலம் ஒக்ரோபர் 15ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 10 ஆம் திகதி வரையாகும்.

இம்முறை பெரும்போகம் 15ஆம் திகதி ஆரம்பமாகி அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நிறைவடையும். இதற்கான நீர் விநியோகத்தை நீர்ப்பாசனத் திணைக்களம் வழங்கவுள்ளது.

விதைப்பு காலத்துக்கு முன்பதாக கால்நடைகளை அப்புறப்படுத்துவது முதல் பல விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது, விவசாயிகள் மத்தியிலே திரவ உரம் தொடர்பில் பார்க் நிறுவனத்தின் பணிப்பாளர் இரத்தின சபாபதி பாஸ்கரன் தலைமையிலான குழுவினர் விளக்கமளித்தனர். (எ-08)

# சம்மாந்துறையில் சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா

சம்மாந்துறை, ஒக். 01

சம்மாந்துறை ஒய்வூதியர் நலன்புரி சமூக சேவை சபையின் சர்வதேச முதியோர் சிறுவர் தின கொண்டாட்ட விழா இன்று புதன்கிழமை சம்மாந்துறை மல்கம்பிட்டி பள்ளிவாசல் முன்றலில் நடைபெறவுள்ளது.

ஓய்வூதிய சபையின் தலைவரும் சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான [illegible] இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

90 வயதுக்கு மேற்பட்ட மூன்று வயோதிபர்கள் மற்றும் தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற ஓய்வூதியர்களின் நான்கு பேரப்பிள்ளைகள் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர். (எ-08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போராட்டத்தின்...

போராட்டத்தின் இறுதியில் கோரிக்கைகள் அடங்கிய மனு வாசிக்கப்பட்டு, ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பி வைக்கப்படும் என்று கூறினர். (ஐ)

## எரிபொருள்...

புதிய விலை 180 ரூபாயாகவும் உள்ளன.

92 ஒக்ரேன் பெற்றோல், சுப்பர் டீசல் என்பவற்றின் விலைகள் குறைக்கப்படவில்லை. மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்தின் பிரகாரமே இந்த விலை குறைப்பு நடைமுறைக்கு வந்துள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (ஐ)

## நாட்டில்...

50 சதவீதம் மனநோய்களால் ஏற்படுகிறது என்று தெரியவந்துள்ளது. தினமும் 8 பேர் தற்கொலை செய்கின்றனர். இது வருடத்துக்கு சுமார் 3 ஆயிரத்து 200 ஆக உள்ளது.

பெரும்பாலான இளைஞர்கள் மனச்சோர்வு எனப்படும் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். கைபேசிகளுக்கு அடிமையாதல், கஞ்சா, ஐஸ் போன்ற போதைப்பொருள் பயன்பாடு அதிகரிப்பு என்பன மனநோய்கள் அதிகரிக்க வழிவகுத்துள்ளன. மதுவுக்கு அதிக நாட்டம் கொண்டவர்களும் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## முதலீட்டாளர்...

மற்றும் தொடர்ச்சியான நிதி ஒழுக்கம் தேவை எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடன் பத்திர பரிமாற்றத்தைத் தொடர்ந்து, உள்நாட்டு நிதி நிலைமைகள் பெரும்பாலும் சாதாரண நிலைக்குத் திரும்பியுள்ளன. திறைசேரி உண்டியல் வட்டி விகிதங்கள் மார்ச் மாதத்துக்குள் சுமார் 8.5 வீதமாகக் குறைந்துள்ளன. இது மறு நிதியளிப்பு அபாயங்களைக் குறைப்பதற்கு அவசியம்.

2023ஆம் ஆண்டு செப்ரெம்பரில் மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் உடனடி அழுத்தங்களைப் போக்க உதவியுள்ளன. இதனால் தனியார் கடன் வளர்ச்சி மீண்டும் தொடங்கவும், தற்போதைய பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிக்கவும் முடிந்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், கடன் மறுசீரமைப்பு மட்டுமே கடன் நிலைத்தன்மையை உறுதி செய்யாது என்று சர்வதேச நாணய நிதியம் எச்சரித்துள்ளது.

தொடர்ச்சியான - விவேகமான நிதி மற்றும் பொருளாதார கொள்கைகளும் வலுவான நிறுவனங்களும் அத்தியாவசியமானவை. நிதித்துறையில் எந்தச் சறுக்கல்களும் இருக்கமுடியாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், புதிய கடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதற்கு முன்னர் செலவு மற்றும் அபாய பகுப்பாய்வு அவசியம் என்றும், புதிய கடன் திட்டங்கள் நாட்டின் இலக்குகளுடன் ஒத்துப் போகவேண்டும்.

அதிக வரி விகிதங்கள், பிழையான கொள்கைத் தவறுகள் மற்றும் வெளிச் சந்தையில் கடன் பத்திரம் வெளியிட்டமை போன்ற காரணிகளின் கலவையால்தான் இலங்கையில் கடன் நெருக்கடி ஏற்பட்டது.

நிதி நிலைத்தன்மையை பாதுகாக்க தொடர்ச்சியான விழிப்புணர்வு தேவை. அரச நிதி முகாமை மற்றும் பொதுக் கடன் முகாமை சட்டங்களை இயற்றியமை அதிகாரிகளை விவேகமான முடிவுகளை நோக்கி நகர்த்துவதற்கான முக்கிய மைல்கற்கள். இந்தநிலையில், இலங்கையின் அனுபவம், சிக்கலான கடன் வழங்கல்களை கையாளும் மற்ற வளரும் பொருளாதாரங்களுக்குப் படிப்பினைகளை வழங்குகிறது என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. (அ)

## இலங்கையின்...

அத்துடன், வீட்டு நுகர்வை கட்டுப்படுத்தும் ஆபத்தையும் விளைவிக்கிறது என்று அந்த வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், 2025ஆம் ஆண்டில் இலங்கையின் மீட்சி வேகம் பெற்றிருந்தாலும் பணம் அனுப்புதல், சுற்றுலா மற்றும் உள்நாட்டு தேவை ஆகியவற்றால் ஆதரிக்கப்பட்டாலும் நாடு ஒரு முக்கியமான கட்டத்தில் உள்ளது. கடன் மறுசீரமைப்பை நிர்வகிப்பதிலும் வெளிப்புறத் தடைகளைத் தாண்டிச் செல்வதிலும் வெற்றி பெறுவது, அதன் பலவீனமான வளர்ச்சி பாதையை 2026 மற்றும் அதற்கு பிறகும் நிலைநிறுத்த முடியுமா என்பதைத் தீர்மானிக்கும் என்று அந்த அமைப்பு இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## வடக்கின்...

வன்னி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினரின் தலையீடுகள் எல்லை மீறிச் செல்கின்றன. பாடசாலை நிகழ்வுகளுக்கு அரசியல்வாதிகள் செல்லக்கூடாது என்ற பிரதமரின் கூற்று வெறும் வாய்ப்பேச்சோடு நின்றுவிட்டது. தம்மை அரசாங்க ஆதரவாளர்களாகக் காட்டி, அரசாங்க தரப்பு அரசியல்வாதிகளை பாடசாலைகளுக்கு அழைத்து குறுக்கு வழிகளில் சலுகைகளை அனுபவிக்கும் கீழ் நிலைக்கு சில பாடசாலை அதிபர்கள் செல்லும் நிலைக்கு வடக்கு மாகாணத்தின் கல்வியில் அரசியல் தலையீடு அதிகரித்துள்ளது.

பிரதி அமைச்சர்களாகவும் இருந்து கொண்டு ஜே. வி. பி. சார்பு ஆசிரியர் சங்கத்தின் செயலாளர்களாகவும் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தி வடக்கு மாகாண ஆளுநருடன் அமைச்சர்களாக அமர்ந்துகொண்டு தமது தொழிற்சங்கத்துடனான சந்திப்பு என்ற போர்வையில் வடக்கு மாகாண அதிகாரிகளை மிரட்டுகிறார்கள். இதுபோன்ற அரசியல் தலையீடுகள் முன்பிருந்த எந்த ஆட்சியிலும் நடைபெற்றதில்லை.

வடக்கு மாகாணத்தில் நடைபெறும் இட மாற்றங்களில் இட மாற்ற சபை, மேன்முறையீட்டு சபையின் தீர்மானங்களை மீறி அரசாங்க சார்பு தொழிற்சங்கமாக காட்டி அதிகாரிகளை அச்சுறுத்தி ஒரு தலைப்பட்சமான முடிவுகளை திணிக்க முயல்கிறார்கள்.

இடமாற்ற சபைகளின் தீர்மானங்களையே ஒரு தலைப்பட்சமாக மாற்றியமைக்க செயல்படும் அதேவேளை, தமது ஆதரவாளர்களுக்கு இடமாற்ற மேன்முறையீட்டு சபையின் அங்கீகாரமின்றி, வடக்கு மாகாண ஆளுநரை கொண்டு இடமாற்றங்களை நிறுத்தும் செயல்பாடுகளிலும் ஈடுபடுகிறார்கள்.

வடக்கு மாகாண ஆளுநர் தன்னிச்சையாக இடமாற்றங்களை நிறுத்தும் அளவுக்கு அரசியல் தலையீடுகள் எல்லை மீறியுள்ளன. அத்துடன் அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுகிறார்கள். தமது பதவி நிலையை மீண்டும் குறுக்கு வழியில் பெற்றுக்கொள்வதற்காக வடக்கு மாகாணத்தின் கல்வி திணைக் களத்தில் உள்ள மேலதிக அதிகாரி ஒருவரும் தனது எதிர்கால வரப்பிரசாதங்களை பெறுவதற்காக, ஜே. வி. பி. சார்பு ஆசி ரியர் தொழிற்சங்கத்தின் நிகழ்ச்சிநிரலில் செயல்படுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இடமாற்றங்கள் அரசியல் நிகழ்ச்சிநிரலில் நடக்கும் செயற்பாடுகளை இலங்கை ஆசிரியர் சங்கம் முற்றாக எதிர்க்கின்றது. இத்தகைய அரசியல் தலையீடுகளை எதிர்க்கும் முகமாக 2025.09.24ஆம் திகதிய வட மாகாணத்தில் சேவையின் தேவை கருதிய இட மாற்றம் தொடர்பான, இடமாற்ற சபையை இலங்கை ஆசிரியர் சங்கம் புறக்கணித்து வெளியேறியுள்ளது. குறித்த சில முறைகேடுகள் மற்றும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம் - என்றுள்ளது. (ஐ)

# கைதான பெண் கைதிகளுடன் 47 குழந்தைகளும் சிறைகளில்!

கொழும்பு, ஒக். 01

2025 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள பெண் கைதிகளுடன் 47 குழந்தைகள் சிறைச்சாலையில் உள்ளதாக சிறைச்சாலை தலைமையகம் தெரிவித்துள்ளது.

20 ஆண் குழந்தைகளும் 27 பெண் குழந்தைகளுமே இவ்வாறு பெண் கைதிகளுடன் சிறைச்சாலையில் உள்ளனர்.

2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 1483 பெண்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 229 பெண்கள் குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்டு சிறைத் தண்டனை பெற்றவர்கள் ஆவர்.

2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 184 பெண்கள் போதைப்பொருள் குற்றம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (அ)

## பாடசாலை...

மாவட்ட அரச அதிபர் ஜே. அருள்ராஜிடம் நேற்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹெந்துன்நெத்தி, பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு , கிழக்கு படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜே. எஸ். பி. டபிள்யூ. பல்லேகும்புர, 23வது காலாட் படையின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி. பி. பி. குணதிலக, மாகாண கல்வி பணிப்பாளர், பிரதேச செயலாளர், கல்குடா வலயக் கல்வி பணிப்பாளர் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## இனவாதத்தை...

கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர், "ரணிலும், மகிந்தவும் 'நம்பர் வன்' திருடர்கள். மத்திய வங்கியில் கொள்ளையடித்தவர்தான் ரணில். போதைப்பொருள் வியாபாரிகளை பாதுகாத்தவர்தான் ராஜபக்ஷ", என்றும் சாடியுள்ளார்.

யாழ்ப்பாணம் விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் செயல்பாடுகளை மீள ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதற்கு தலைமை தாங்கி உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "பொருளாதார ரீதியில் இலங்கை வேகமாக முன்னேறி வருகின்றது என தரவுகள் கூறுகின்றன. இதேபோல இலஞ்ச, ஊழல் ஒழிக்கப்பட்டு வருகின்றது. இனவாதம் மற்றும் மதவாதம் என்பவற்றுக்கும் முடிவு கட்டப்பட்டு வருகின்றது.

நாட்டில் வாழும் மூவின மக்களும் ஓரணியில் திரள வேண்டும். அவ்வாறு நடந்தால் இலகுவில் முன்னோக்கிச் சென்று விடலாம். இதனையே எமது ஜனாதிபதி தோழர் எல்லா இடங்களிலும் வலியுறுத்தி வருகிறார். எனவே, இந்த இனவாதம் என்ற பிசாசுக்கு எமது நாட்டில் நிரந்தமாக முடிவு கட்ட வேண்டும். அதற்குரிய நடவடிக்கையை நாம் முன்னெடுக்கும்போது பழைய பிசாசுகள் மீண்டெழுவதை காண முடிகின்றது. பழைய திருடர்கள் ஓரணியில் திரண்டுள்ளனர். அதிகாரத்துக்காக சதி மற்றும் சூழ்ச்சிகளை செய்ய முடியுமா என்பது பற்றி ஆராய்கின்றனர்.

இனவாதத்தைத் தூண்டியேனும் தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள முடியுமா என்பது பற்றியும் கதைக்கின்றனர். இது பற்றியே ரணிலும், மகிந்தவும் அவரின் வீட்டில் மந்திராலோசனை செய்கின்றனர். ரணிலும் மகிந்தவும் 'நம்பர் வன்' திருடர்கள். கடந்த காலங்களில் மத்திய வங்கியில் கொள்ளையடித்தவர்தான் ரணில். இந் நாட்டில் போதைப்பொருள் வியாபாரிகளை பாதுகாத்தவர்தான் ராஜபக்ஷ. எனவே, இவர்களிடமிருந்து நாட்டைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் எமது பிள்ளைகளின் எதிர்காலம் பாதுகாக்கப்படும்." - என்றார். (ஐ)

## ரவிராஜ்...

செய்யப்படவில்லை என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அதன் உரையாடல் வடிவம் வருமாறு,

கேள்வி : சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் உறுப்பினர் சம்பத் மன்னம்பேரி நடராஜா ரவிராஜ் படுகொலையின் சந்தேக நபர் என்று அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார். பொலிஸ் ஊடக பணிமனையம் இதனை உறுதிப்படுத்தியுள்ளது. இவ்விடயம் பற்றி என்ன குறிப்பிடுகின்றீர்கள் ?

பதில் : சம்பத் மன்னம்பேரி நடராஜா ரவிராஜ் படுகொலை விவகாரத்தில் சந்தேக நபரல்லர், அவர் சாட்சியாளர். அவருக்கு எதிராக இந்த விடயத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. இதனை நான் ஆராய்ந்து பார்த்தேன்.

கேள்வி : அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டதன் பின்னரா தேடிப்பார்த்தீர்கள்?

பதில் : இல்லை, ஊடகங்களில் இவ்விடயம் வெளியான பின்னரே ஆராய்ந்து பார்த்தேன். கட்சியின் வேட்புமனு வழங்கும்போது சகல உறுப்பினர்களும் சத்திய கடதாசி வழங்கினார்கள். அதில் இவர் இந்த விடயம் பற்றி ஏதும் குறிப்பிட்டிருக்கவில்லை - என்றார். (ஐ)

## தமிழ்....

சம்பவம் தொடர்பில் சம்பத் மன்னம்பேரி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது மன்னம்பேரி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, தனது சேவைபெறுநர் வேறு ஒரு வழக்கு தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்தார்.

இதையடுத்து, தொடர்புடைய சந்தேகநபர் குறித்த அறிக்கையை அடுத்த வழக்கு தவணையின்போது சமர்ப்பிக்குமாறு நீதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதேநேரம், இந்த வழக்கில் மற்றொரு சந்தேகநபராக உள்ள நிரஞ்சன் பெரேரா என்பவரும் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. அவர் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த சம்பவம் தொடர்பாக மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று அவரின் சட்டத்தரணி அறிவித்தார்.

முன்னதாக, 2009 ஒகஸ்ட் 12 ஆம் திகதி கொழும்பு - நாரஹன்பிட்டி சந்தியருகே, பொலிஸார் போல வேடமிட்டு, கிழக்கு மாகாணத்தில் இருந்து கொழும்புக்கு அரிசி கொண்டு வந்த தமிழ் வர்த்தகரை அச்சுறுத்தி பெருந்தொகை அரிசி, பாரவூர்தி, பணம் மற்றும் கைபேசியை கொள்ளையடித்தனர் என்று சம்பத் மனம்பேரி உட்பட 4 சந்தேகநபர்கள் மீது சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வெளிநாட்டு முதலீட்டு கொள்கைளை நடைமுறைப்படுத்துவதில் முரண்பாடு!

## இலங்கைக்கு எதிராக அமெ. குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 01

**இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் முரண்பட்ட தன்மை காணப்படுவதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

2025 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் முதலீட்டுப் பின்னணி குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், இது தொடர்பில் பல முக்கிய விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் சிரேஷ்ட அரச அதிகாரிகள், தனியார் துறை தலைமையிலான பொருளாதார வளர்ச்சியை தொடர்ந்து விமர்சித்து வருவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒத்துழைத்து முதலீட்டாளர்களுக்கு உத்தரவாதம் அளித்தாலும், அரசாங்கத்தின் பழைய மேற்குலக எதிர்ப்பு மற்றும் மார்க்சிச செல்வாக்கு கொண்ட சித்தாந்தங்கள் காரணமாக, பல முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதில் சந்தேகத்துடன் இருப்பதாக அறிக்கை கூறுகிறது.

அத்துடன், வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் முரண்பட்ட தன்மை காணப்படுவதாகக் கூறும் அமெரிக்கா, இலங்கை முதலீட்டுச் சபை பிரதான முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனம் என்ற போதிலும், அவர்களுடன் நிலையான மற்றும் வெளிப்படையான உரையாடலை பேணுவது சவாலாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இதனிடையே,தேவையற்ற கட்டுப்பாடுகள், சட்ட நிச்சயமற்ற தன்மை மற்றும் அதிகாரிகளின் பலவீனமான பதிலளிப்பு போன்றவையும் இலங்கையில் முதலீடு செய்வதற்கு உள்ள ஏனைய பிரச்னைகளாக அந்த அறிக்கை பட்டியலிட்டுள்ளது.




இதேவேளை, இந்திய நிறுவனமான அதானி க்ரீன் எனர்ஜி, இலங்கையின் வடக்கு மாகாணத்தில் இருந்து 400 மில்லியன் டொலர் பெறுமதியான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்தில் இருந்து விலகியதை அமெரிக்க அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்குக் காரணம், முன்னர் வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய இலங்கை அரசாங்கம் எடுத்த முயற்சிகளே என அதானி நிறுவனம் தெரிவித்துள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊழலை ஒழிப்பதற்கும் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதற்கும் ஜனாதிபதி பகிரங்கமாக உறுதியளித்துள்ளதாகவும், புதிய நிர்வாகத்தின் கீழ் உயர் மட்ட அரசியல் இலஞ்சக் கோரிக்கைகள் குறைந்துள்ளதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது.

எனினும், குறிப்பாக சில சலுகை பெற்ற குழுக்களால் பாதுகாக்கப்பட்ட துறைகளில் நிறுவன ரீதியிலான ஊழல் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

(அ)

# சீன பட்டாசுகளுக்கு தடை

கொழும்பு, ஒக். 01

நாட்டில் தடைசெய்யப்பட்ட மற்றும் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட பட்டாசுகள் மற்றும் சீன பட்டாசுகள் ஆகியவற்றைப் பயன்படுத்துபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டின் சில பகுதிகளில் பட்டாசுத் தொழிலிலிருந்து வெளியிடப்படும் மூலப்பொருட்கள் மற்றும் பிற இரசாயனங்களைப் பயன்படுத்தி சீன பட்டாசுகள் எனப்படும் சட்டவிரோத வெடிபொருட்கள் தயாரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த "சீன பட்டாசுகள்" பட்டாசு மற்றும் பட்டாசு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி "ஹக்கா பட்டாசுகள்" எனப்படும் சட்டவிரோத வெடிபொருட்கள் தயாரிக்கப்படுவதாகத் தகவல் கிடைத்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

விவசாய நிலங்களிலிருந்து காட்டு விலங்குகளை விரட்ட இவை பரவலாகப் பயன்படுத்தப்படுவதாகவும், இந்த சட்டவிரோத வெடிபொருட்களால் மக்கள் மற்றும் வனவிலங்குகளுக்கு பல கடுமையான காயங்கள் மற்றும் இறப்புகள் கடந்த காலங்களில் பதிவாகியுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வெடிபொருட்கள் குறிப்பிடத்தக்கச் சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்பு சவால்களையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு, இலங்கை பொலிஸாருடன் இணைந்து நாடு முழுவதும் சிறப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்தப் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (அ)

# இலங்கை மாணவர்களுக்கு கூகிளின் இலவச ஏ.ஐ. வசதி

கொழும்பு, ஒக். 01

கூகிள் தனது ஏ.ஐ. இயங்குதளமான ஜெமினியின் சிறப்பம்சங்களை இலங்கை மாணவர்களுக்கு இலவசமாக வழங்குவதற்கு இணங்கியுள்ளதாக டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

ஏ.ஐ. தேசிய கண்காட்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த விரிவான திட்டம் நாடு முழுவதும் உள்ள மாணவர்களுக்கு சமீபத்திய செயற்கை நுண்ணறிவு கருவிகள், வளங்களை இலவசமாக அணுக உதவும்.

இந்த நடவடிக்கையானது ஏ.ஐ. அபிவிருத்தி மற்றும் டிஜிற்றல் கல்வியறிவு ஆகியவற்றிற்கான இலங்கையின் தேசிய திறனை கணிசமாக உயர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் மூலம் அடுத்த தலைமுறையினர் புதுமைகளை உருவாக்கவும், சிக்கலான சவால்களை தீர்க்கவும் மற்றும் உலகளவில் போட்டியிடவும் உதவுகிறது.

மாணவர்கள் இந்த சக்திவாய்ந்த கருவிகளை பொறுப்புடன் மற்றும் சமூகத்தின் நன்மைக்காகப் பயன்படுத்துமாறு டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன வலியுறுத்தினார். (அ)

# மன்னார் தீவில் கை வைத்துள்ள அரசு நாளை கச்சதீவையும் தாரைவார்க்கும்!

## வசந்த முதலிகே எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 01

மன்னார் தீவில் இன்று கை வைத்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், நாளை கச்சதீவைக்கூட இந்தியாவுக்கு வழங்குவதற்கு முன்வரக்கூடும் என்று மக்கள் போராட்ட இயக்கத்தின் உறுப்பினர் வசந்த முதலிகே தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

தேசிய வளங்கள் வெளிநாடுகளுக்கு விற்கப்படாது எனக் கூறியே தேசிய மக்கள் சக்தி ஆட்சிபீடமேறியது. ஆனால் இந்தியாவின் நிகழ்ச்சிநிரலே ஆட்சியாளர்களால் இங்கு அமுல்படுத்தப்பட்டுவருகின்றது.

இந்தியாவுடன் கடந்த ஏப்ரல் மாதம் ஏழு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. அவை எவ்வாறான ஒப்பந்தங்கள் என்பது பற்றி அரசாங்கம் நாட்டு மக்களுக்கு இன்னும் பகிரங்கப்படுத்தவில்லை. இதற்கமைய மன்னார் தீவைக் கைப்பற்றுவதற்கு இந்தியா திட்டம் தீட்டியுள்ளது.

மன்னாரில் பாரிய சுற்றாடல் பாதிப்பு ஏற்படப்போகின்றது. மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு தாக்கங்கள் ஏற்படப்போகின்றன. இவை பற்றி ஆட்சியாளர்களுக்கு கவலை இல்லை. எதிரணியில் இருந்தபோது மன்னார் நிலவரம் பற்றி கதைத்தனர். ஆட்சிக்கு வந்த பின்னர் அவற்றை மறந்துவிட்டனர். இன்று மன்னார் மக்கள் வீதிக்கு வந்துள்ளனர். மக்கள்மீதுகூட தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதுதான் மறுமலர்ச் சியா?

இலங்கையின் கடல்வளத்தை இந்தியா கொள்ளையடிக்கின்றது. இதற்கு இலங்கை மீனவர்கள் நீதி கோரியபோதும் அரசாங்கம் மௌனம் காக்கின்றது.

கச்சதீவு விவகாரம் மீண்டும் பேசுபொருளாகியுள்ளது. ஜனாதிபதி அண்மையில் கச்சதீவு சென்றிருந்தார். அதனை இந்தியாவுக்கு வழங்கமாட்டோம் எனக் கூறி இருந்தார். தான் கூறுவதற்கு எதிரானதையே ஜனாதிபதி செய்துவருகின்றார். எனவே, வழங்கமாட்டேன் எனக் கூறினாலும் கச்சதீவையும் வழங்கிவிடுவார்களோ என்ற அச்சம் எமக்கு உள்ளது. உள்ளக ரீதியில் பேச்சு நடக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது - என்றார்.

(அ)

# 3 இலங்கையர்கள் பெங்களூரில் கைது!

சென்னை, ஒக். 01

சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருந்த குற்றச்சாட்டில் மூன்று இலங்கையர்கள் பெங்களூரின் தேவனஹள்ளி அருகே உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் வைத்து இந்திய மத்திய குற்றப்பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் இலங்கையில் குற்றங்களில் ஈடுபட்டதாகவும், பல மாதங்களாக நகரத்தில் தலைமறைவாக இருந்ததாகவும் அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் இரத்மலானையைச் சேர்ந்த வித்யானகமகே இரேஷ் ஹன்ஷக ஜயரத்ன (வயது-31), கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த ஜெயசிங்க பத்திரனகே சுகத் சமீந்து (வயது-46) மற்றும் தேவேந்திரமுனையை சேர்ந்த ஜெயசூரிய முதலிகே திலீப் ஹறிஷன் (வயது 29) என்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்கள் தேவனஹள்ளி அருகே ஓசோன் அர்பானா அடுக்குமாடி குடியிருப்பில் ஒரு வாடகை குடியிருப்பில் வசித்து வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணையில், மூவரும் 2024 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து இராமேஸ்வரம் ஊடாக சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்தமை தெரியவந்தது.

அதன் பிறகு அவர்கள் பெங்களூர் செல்வதற்கு முன்பு சென்னை மற்றும் கோயம்புத்தூரில் சிறிது காலம் தங்கினர்.

அவர்கள் எட்டு மாதங்களாக ஓசோன் அர்பானாவில் வசித்து வருகின்றனர்.

அவர்களில் எவருக்கும் கடவுச்சீட்டு உட்பட செல்லுபடியாகும் ஆவணங்கள் இல்லை என்பதும் தெரியவந்துள்ளது.

வித்யானகமகே போதைப்பொருள் கடத்தல் வழக்கில் தேடப்பட்டு வருவதாகவும், ஜெயசிங்க மீது இலங்கையில் கொலை மற்றும் பிற குற்றச்செயல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் இருப்பதாகவும் பொலிஸார் விசாரணைகளில் தெரிவித்தனர். ஹறிஷன் பற்றிய விவரங்கள் தெளிவாகத் தெரியவில்லை.

ஆனால் மூவரும் தங்கள் சொந்த நாட்டில் கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக இந்தியாவுக்கு வந்ததாக அதிகாரிகள் நம்புகின்றனர்.

# யாழ்.வந்தார் கரு ஜயசூரிய!

யாழ்ப்பாணம், ஒக். 01

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கும் யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கும் இடையிலான சந்திப்பு ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது.

தனது பிறந்த தினத்தை ஒட்டி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களுக்கும் சென்றார்.

அந்த வகையில் நேற்று முன் தினம் மாலை ஆயர் இல்லத்துக்கு விஜயம் மேற்கொண்ட முன்னாள் சபாநாயகர், ஆயருடன் சமகால விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார்.

மேலும் யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மாணவர்களுக்கு சிங்கள மொழியை கற்பித்தல், அவர்கள் தென்னிலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள இடங்களை பார்வையிடுவது, தென் இலங்கையில் உள்ள சிங்கள மாணவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு இங்குள்ள கலாசாரங்களை அறிந்து கொள்ளுதல் ஆகிய விடயங்களை முன்னெடுத்துச் செல்வதை நோக்காகக் கொண்டு இந்த விஜயம் இடம்பெற்றதாக கரு ஜயசூரிய தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org